**சார்பு நீதிமன்றம், ஊத்தங்கரை**

**முன்னிலை:– திருமதி. G. கலைவாணி, பி.ஏ., பி.எல்.,**

**சார்பு நீதிபதி, ஊத்தங்கரை.**

2025–ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 06–ம் நாள் திங்கட்கிழமை
2056 திருவள்ளுவர் ஆண்டு ஸ்ரீ குரோதி வருடம் மார்கழி மாதம் 22-ம் நாள் திங்கட்கிழமை

இடை நிலை மனு எண்.02/2023

இன்

அசல் வழக்கு எண்.196/2017

திருமதி. சரஸ்வதி ... மனுதாரர்/வாதி

//எதிராக//

1. D. கோவிந்தன்
2. G. ரமேஷ்
3. G. ஜானகி
4. R. விமலா
5. K. மாயக்கண்ணன்
6. வெங்கடாச்சலம் ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது 06.01.2025–ம் தேதி இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியான விசாரணைக்கு கொண்டுவரப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. S. சசிகுமார், அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 4 வரையிலான எதிர்மனுதாரர்களை இந்நீதிமன்றத்திற்கு அழைக்கப்பட்டும் ஆஜரின்மையால் தோன்றாத்தரப்பினர்களாக கருதப்பட்டுள்ளார்கள். 5, 6 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. N.K. முருகன் அவர்கள் ஆஜராகியும், மனுதாரர் மற்றும் 5, 6 எதிர்மனுதாரர்கள் தரப்பு கேட்கப்பட்டும், ஆவணங்களை பரிசீலனை

செய்தும், இதுநாள்வரையில் இந்நீதிமன்றப் பரிசீலனையில் இருந்ததுமான இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு பிறப்பிக்கும்

## உத்தரவு

இம்மனுவானது மனுதாரருக்கு எதிராக 04.07.2022-ம் தேதியில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் பேரில் தள்ளுபடி ஆன தாவாவினை மீண்டும் விசாரணைக்கு எடுத்து உத்தரவு செய்யக் கோரி வேண்டும் என்று மனுதாரரால் கட்டளை 09 விதி 09 சட்டப் பிரிவு 151-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுவின் சுருக்கம்**

(2-1) தான் மேற்படி மனுவில் மனுதாரர் மற்றும் மேற்படி வழக்கில் வாதி என்றும்,வழக்கினை பிரதிவாதிகளுக்கு எதிராக பாகம்கோரியும், தனி சுவாதீனம் கோரியும் 5, 6 பிரதிவாதிகள் பெயரில் பெயரளவில் ஏற்படுத்தப்பட்ட ஆவணங்களை செல்லாது என அறிவிக்க கோரியும் மேற்கண்ட வழக்கை தான் தாக்கல் செய்துள்ளேன் என்றும்,

(2-2) மேற்படி வழக்கில் 04.07.2022-ம் தேதியில் விசாரணைக்காக வாய்தா போடப்பட்டு இருந்து தன்னை நீதிமன்றத்தில் அழைத்தபோது ஆஜராகவில்லை என தள்ளுபடி செய்து உத்தரவு செய்யப்பட்டது என்றும், வாய்தா தேதிக்கு முன்பே 01.07.2022 முதல் தான் மஞ்சள் காமாலை நோயால் பாதிக்கப்பட்டு பல இடங்களில் நாட்டு வைத்திய சிகிச்சை எடுத்துக் கொண்டேன் என்றும், ஆதலால் மேற்கண்ட வழக்கை தொடர தனது வழக்கறிஞருக்கு தன்னால் முறையான தகவலை தெரிவிக்க முடியவில்லை என்றும், இப்போது தான் குணமடைந்து விட்டேன் என்றும், மேற்படி செயல் வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல என்றும், தான் தனது வழக்கினை நடத்த தயாராக உள்ளேன் என்றும், தனது

வழக்கில் நல்ல வெற்றி வாய்ப்பு தனக்கு உள்ளது என்றும் தனது மனுவில் தெரிவித்துள்ளார்.

## 3. <u>6–ம் எதிர்மனுதாரரின் எதிருரையின் சுருக்கம்</u>

(3–1) மனுதாரரின் மனு பொய்யும் புரட்டுமானது என்றும், சட்டப்படியும் நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல என்றும், முதல் நிலையிலேயே தள்ளுபடி செய்யத்தக்கதாகும் என்றும், இந்த எதிர்மனுதாரர் எதிருரையில் ஒப்புக்கொள்ளும் சங்கதிகளைத் தவிர மற்ற அனைத்தையும் மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர் என்றும்,

(3–2) மனுவில் மனுதாரர் என்பதும் அசல் வழக்கில் வாதி என்பதும், இம்மனு எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கில் பிரதிவாதிகள் என்பதும் உண்மை என்றும், மேற்படி வழக்கினை பிரதிவாதிகளுக்கு எதிராக பாகம்கோரியும், தனி சுவாதீனம் கோரியும் 5, 6 பிரதிவாதிகள் பெயரில் பெயரளவில் ஏற்படுத்தப்பட்ட ஆவணங்களை செல்லாது என அறிவிக்க கோரியும் தாக்கல் செய்துள்ளதாக கூறியுள்ளது உண்மை என்றும்,

(3–3) மேற்படி வழக்கில் கடந்த 04.07.2022–ம் தேதியில் விசாரணைக்காக வாய்தா போடப்பட்டிருந்தது உண்மை என்றும், அன்றைய வாய்தா தேதியில் மனுதாரர் ஆஜரில்லாததால் மனு ஒருதலைபட்சமாக தள்ளுபடி செய்யப்பட்டது என்பது உண்மை என்றும், மனுதாரர் கடந்த 01.07.2022–ம் தேதியிலிருந்து மஞ்சள் காமாலை நோய்க்காக பல இடங்களில் நாட்டு வைத்தியம் பார்த்துக்கொண்டு வந்ததாகவும், அதனால் மனுதாரரின் வழக்கறிஞருக்கு உரிய தகவல் அளிக்க இயலவில்லை என்றும், தற்போது மனுதாரர் குணமடைந்துவிட்டதாகவும், மேற்படி செயல் வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல என்றும், வழக்கில் மனுதாரருக்கு நல்ல வாய்ப்பு உள்ளதாகவும் கூறியுள்ள சங்கதிகள் பொய்யான சங்கதிகள் என்றும்,

(3-4) உண்மை சங்கதி என்னவெனில் வழக்கில் வெற்றி பெற முடியாது என்பதை நன்கு உணர்ந்த மனுதாரர் வேண்டுமென்றே வாய்தா தேதியில் இந்நீதிமன்றத்தில் ஆஜராகாமல் வழக்கினை தள்ளுபடிக்கு விட்டுவிட்டு, தற்போது இந்த எதிர்மனுதாரர்கள் விரைவில் எவ்வித பலனும் அடைந்துவிடக்கூடாது என்ற கெட்ட எண்ணத்திலும், இந்த எதிர்மனுதாரர்களை வீணாக அலைக்கழிக்கவும், வழக்கினை காலம் கடத்தவும் வேண்டி மனுதாரர் இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளதால் மனுதாரரின் மனு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டிய ஒன்றாகும் என்றும்,

(3-5) உண்மையில் மனுதாரருக்கு மஞ்சள் காமாலை நோய் வந்திருந்தால் எந்த எந்த ஊர்களுக்கு சென்று எத்தனை நாட்கள் சிகிச்சை பெற்றார் என்றும், சிகிச்சை பெற்றதற்கான ஆவணங்களையும் ஒப்படைத்திருப்பார் என்றும், மனுதாரருக்கு மஞ்கள் காமாலை நோய்க்காக சிகிச்சை பெற்று வந்ததால் மேற்படி வாய்தா தேதியில் இந்நீதிமன்றத்தில் ஆஜராகாததால் தள்ளுபடி செய்யப்பட்ட வழக்கினை மீண்டும் கோப்பிற்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும் இல்லையெனில் மனுதாரருக்கு ஈடு செய்ய இயலாத சூழ்நிலை ஏற்பட்டுவிடும் என்பதும் பொய்யான சங்கதிகள் என்றும், எனவே மனுதாரரின் மனுவினை நிராகரித்து எதிர்மனுதாரர்களின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும் என்று கோரி எதிர்மனுதாரர் தனது எதிருரையில் தெரிவித்துள்ளார்.

**4.** இருதரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**5. தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில்**

மனுதாரர் மனுவில் கோரியுள்ளவாறு மனுதாரருக்கு எதிராக தள்ளுபடி

செய்யப்பட்ட தாவாவை மீண்டும் விசாரணைக்கு எடுக்க வேண்டும் என்று கோரும் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதேயாகும்.

6. தீர்வு:

(6–1) இருதரப்பும் கேட்கப்பட்டது. மனுதாரர் தரப்பில் கடந்த 04.07.2022–ம் தேதியில் விசாரணைக்காக வாய்தா போடப்பட்டு இருந்து தன்னை நீதிமன்றத்தில் அழைத்தபோது ஆஜராகவில்லை என தள்ளுபடி செய்து உத்தரவு செய்யப்பட்டது என்றும், மேற்படி வாய்தா தேதிக்கு முன்பே 01.07.2022 முதல் தான் மஞ்சள் காமாலை நோயால் பாதிக்கப்பட்டு பல இடங்களில் நாட்டு வைத்திய சிகிச்சை எடுத்துக் கொண்டேன் என்றும், ஆதலால் மேற்கண்ட வழக்கை தொடர தனது வழக்கறிஞருக்கு தன்னால் முறையான தகவலை தெரிவிக்க முடியவில்லை என்றும், இப்போது தான் குணமடைந்து விட்டேன் என்றும், மேற்படி செயல் வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல என்றும், தான் தனது வழக்கினை நடத்த தயாராக உள்ளேன் என்றும், தனது வழக்கில் நல்ல வெற்றி வாய்ப்பு தனக்கு உள்ளது என்றும் தனது மனுவில் தெரிவித்துள்ளார். எதிர்மனுதாரர் தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர் தனுது எதிருரையில் மனு சங்கதிகள் அனைத்தும் பொய்யானது என்றும், வழக்கினை அவசியம் ஏதுமின்றி வழக்குமூலம் இல்லாமல் தாக்கல் செய்துவிட்டு பணம் பறிக்கும் எண்ணத்துடன் இந்த பிரதிவாதிகளை அலைக்கழிப்பதற்காக இந்த மனுவினை தாக்கல் செய்து துன்புறுத்துவதால் இந்த மனு தள்ளுபடி ஆக வேண்டும் என்று கோரி எதிருரை தாக்கல் செய்துள்ளார். மேற்படி மனுதாரர் தனக்கு மஞ்சள் காமாலை ஏற்பட்டதாகவும், அதற்காக பல இடங்களில் நாட்டு வைத்தியம் செய்துக்கொண்டதாகவும் கூறியுள்ள

போதிலும் அதற்கு ஆதரவாக மருத்துவ ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. இருந்தபோதிலும் மேற்படி வழக்காணத இம்மனுதாரர் / வாதியால் எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு எதிராக பாகப் பிரிவினை கோரியும் ஆவண விளம்புகைக் கோரியும், உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் வழக்கின் இருதரப்பு முழு விசாரணைக்கு பிறகு வழங்கப்படும் தீர்ப்பே சரியானதாகவும், இயற்கை நீதி கோட்பாட்டிற்கு உட்பட்டதாகவும் இருக்கும் என இந்நீதிமன்றம் கருதுவதால் இந்நீதிமன்றம் மேற்படி இம்மனுவை செலவுத் தொகையுடன் அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவாக, இம்மனுவின் மனுதாரர் எதிர்மனுதாரருக்கு ரூ.500/- செலவுத் தொகையாக வருகின்ற 24.01.2025-ம் தேதிக்குள் செலுத்த வேண்டும் என்றும், தவறும் பட்சத்தில் மனு தள்ளுபடி செய்யப்படும் என்றும் நிபந்தனையுடன் இம்மனு அனுமதிக்கப்படுகிறது. அழைக்க 24.01.2025.**

என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக உரைக்கப்பட்டு அவரால் கணிணியில் வடிவமைக்கப்பட்டதை என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 06.01.2025-ம் தேதி என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ஒம்/- திருமதி. G. கலைவாணி, பி.ஏ. பி.எல்.,
சார்பு நீதிபதி,
ஊத்தங்கரை.

இருதரப்பு சாட்சிகள் மற்றும் இருதரப்பு சான்றாவணங்கள்:

இல்லை

ஒம்/- திருமதி. G. கலைவாணி, பி.ஏ. பி.எல்.,
சார்பு நீதிபதி,
ஊத்தங்கரை.